# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KANNIYAKUMARI AT NAGERCOIL.

03.06.2026

O.S. No. 331/2022

P.W. 1 திரு. அண்ணாதுரை

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) -**

முதல் வாதி ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட்டா அல்லது கீழத்தெரு ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட்டா என்றால் ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட், கீழத்தெரு யாதவர்களுக்கு பாத்தியப்பட்டது. கீழத்தெரு ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட் என்ற பெயர் முதல் வாதிக்கு அல்ல என்றால் அது ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட் என்ற பெயரில் உள்ளது. ஆதிமாமுனிவர் என்பவர் யார் என்றால் எங்களது முன்னோர்கள் அவரை வழிப்பட்டனர். அவர் யார் என்று எனக்கு தெரியாது. ஆதிமாமுனிவர் எங்களது முன்னோர் என்று காண்ப்பிப்பதற்கு ஆவணம் எதுவும் வா.சா.ஆ. 20 ஆன செற்றில்மெண்ட் ஆவணத்திற்கு முன்பு எழுதப்பட்டது எதுவும் இருக்கிறதா என்றால் அதற்கு முன்பு எதுவும்இல்லை. வா.சா.ஆ. 20 ஆவணமானது 1082 ME ல் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 20 செற்றில்மெண்ட் ரெஜிஸ்தருக்கு முன்னால் 1012 ME ல் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. எங்கள் முன்னோர்கள் ஆரம்பித்தார்கள். ஆதிமாமுனிவர்

சமுதாய டிரஸ்ட் ஆரம்பிக்கப்பட்டதற்கு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ. 12 ல் ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட்க்கு எங்கள் சமுதாயத்திலிருந்து கோவிலுக்கு அர்ப்பணிக்கப்பட்டது என்று வாசகம் உள்ளதா என்றால் இரண்டாவது பத்தியில் அந்த தீர்ப்பை வழங்கிய நீதிமன்றமானது வழக்குரையில் சுருக்கத்தை அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். வா.சா.ஆ. 12 ல் தீர்ப்புரையில் கொடுத்த வழக்கில் ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட்க்கு எங்கள் சமுதாயத்திலிருந்து கோவிலுக்கு அர்ப்பணிக்கப்பட்டது என்று என்பதை காண்பிக்கும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட்க்கு எங்கள் சமுதாயத்திலிருந்து கோவிலுக்கு அர்ப்பணிக்கப்பட்டது என்று எந்தவிதமான ஆவணமோ, கொடை ஆவணமோ எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து உட்பட கோவிலுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் சொத்துக்களுக்கு செப்புப்பட்டயமோ, ஓலைச்சுவடுகளோ எதாவது உண்டா என்றால் அவ்வாறு இருந்ததாக எங்கள் முன்னோர்கள் வாய்மொழியாக என்னிடம் சொன்னார்கள். மேலும் அவை சிதைந்துவிட்டது என்று முன்னோர்கள் சொன்னார்கள். செம்புப்பட்டயம் கரையான் அரித்துவிட்டதா என்றால் சிதைந்து விட்டதாக முன்னோர்கள் சொன்னார்கள். வா.சா.ஆ. 20 ஆவணத்தில் பட்டிகை சொத்துடைய பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்றால் ஆதிமாமுனிவர் சமுதாய வெள்ளையப் பணிக்கர் மடம் வகைக்கு என்ற பெயரில் உள்ளது. அந்த பட்டாவானது ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் ஆதிமாமுனிவர்

வெள்ளையப் பணிக்கர் மடம் வகைக்கு என்ற பெயரில் உள்ளது. அது சம்பந்தமாக திருத்தம் செய்ய வேண்டி O.S. No. 14/1108 ME ல் மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. ஸ்கீம் டிகிரியில் கண்டுள்ள Schedule of Property ல் பட்டியலிடப்பட்டிருக்கிறதா என்றால் ஏ இனமாக காட்டப்பட்டுள்ளது. ஆதிமாமுனிவருக்கு வாரிசு இருக்கிறார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆதிமாமுனிவர் எந்த ஜாதியை சார்ந்தவர் என்று எதாவது ஆவணம் உள்ளதா என்றால் தனியாக ஆவணங்கள் எதுவும் இல்லை. அவர் யாதவ சமுதாயத்தை சேர்ந்தவர் என்று எங்கள் முன்னோர்கள் சொன்னார்கள். வா.சா.ஆ. 20 ஆவணத்தில் ஆதிமாமுனிவர் என்பவர் பணிக்கர் ஜாதியை சேர்ந்தவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. ஈழவா என்ற ஜாதியிலும் நாயர் என்ற ஜாதியில் ஒரு பிரிவினரும் பணிக்கர் என்று சொல்லப்படுவார்கள் என்றால் சரியல்ல. இந்த பட்டிகை சொத்து இல்லாமல் மற்ற சொத்துக்கள் சம்பந்தமாக ஆவணங்கள் உள்ளதா என்றால் உண்டு. ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட் உறுப்பினராக சேர தகுதி என்னவென்றால் ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட் கோவிலை சுற்றி கீழத்தெரு யாதவா இனத்திற்கு சேர்ந்தவர்கள் மட்டும் உறுப்பினராக சேர்ந்து கொள்ளலாம். மேற்படி கீழத்தெரு குடியிருப்பவர்களை தவிர வேறு யாரினும் மேற்படி டிரஸ்டில் உறுப்பினராக இருக்க முடியாது என்றால் சரிதான். டிரஸ்டின் உறுப்பினராக மேற்படி கீழத்தெருவில் குடியிருக்க வேண்டும் என்றும், கீழத்தெருவில் சொத்து உரிமையாளராக இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. ஸ்கீம் டிகிரியில் எந்த பகுதியை சேர்ந்தவர் மேற்படி டிரஸ்ட்டில் உறுப்பினர் ஆக

வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. ஸ்கீம் டிகிரியில் யாதவ சமுதாயத்தை சேர்ந்தவர்கள் மட்டும்தான் உறுப்பினராக இருக்க வேண்டும் என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, சொல்லியிருக்கிறது. ஸ்கீம் டிகிரியில் என்ன என்ன தர்ம காரியங்கள் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது என்றால் சரிதான். வசதி குறைந்த பெண்களுக்கு திருமண உதவி, குழந்தைகளின் படிப்பு உதவி, ஈமச் சடங்கு உதவி, ஆகிய தர்ம காரியங்கள் செய்ய வேண்டும் என்று ஸ்கீம் டிகிரியில் சொல்லபடவில்லை. மடம் என்பதும் சமுதாயம் என்பதும் வெற்வேறானவை என்றால் சரிதான். மடம் என்பது தனிநபர் சொத்து என்றால் சரியல்ல. ஸ்கீம் டிகிரியில் ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட்டை ஒரு தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஸ்கீம் டிகிரியில் உள்ள தரப்பினர்கள் தனி நபர்கள் அவர்கள் மேற்படி டிரஸ்டின் உறுப்பினர்கள். அந்த ஸ்கீம் டிகிரியில் அந்த முதல் வாதியின் பெயரில் தனுஷ்கோடியா பிள்ளை மகன் பரசுராமபிள்ளை என்று காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர் யாதவர் மேற்படி நபர் யாதவர் அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் தாவா சொத்து அசல் வழக்கு 14/1108 ME என்ற வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிற நபர்களின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 15 ஆவணத்தில் 1104 ME ஆம் ஆண்டு முதலே பிரதிவாதியின் தகப்பனாருக்கு அனுபவத்தில் இருந்து வருவதை காட்டுகிறது என்றால் எங்களது டிரஸ்டிலிருந்து எனது முன்னோர்களான இரண்டு நபர்கள் ராமசாமி மற்றும் சிவசுப்பிரமணியம் டிரஸ்டிகளாக இருந்து தரவாடகையாக பிரதிவாதியின் தகப்பானருக்கு பதிவு செய்த ஆவணமாக சுமார் 18 சென்ட் அளவில்

எழுதி கொடுத்துள்ளனர். 1104 ME என்ற மலையாள ஆண்டு ஆங்கில வருட கணக்கில் 825 ஐ கூட்டினால் சரியான வருடம் கிடைக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கு திருவிதாங்கூர் CPC சட்டப்படி பிரிவு 72 ன்படி தாக்கல் செய்யவில்லை என்றால் சட்டம் பற்றி கேள்வி எனக்கு தெரியாது. அந்த 72 சட்டப் பிரிவின் படி திவான் அனுமதி பெற்றுதான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் அது பற்றி தெரியாது. அவ்வாறு திவான் முன் அனுமதி பெற்றாமலும், டிரஸ்ட்டை தரப்பினராக சேர்க்காமலும் தாக்கல் செய்யப்பட்டு பெறப்பட்ட ஸ்கீம் டிகிரி சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. ஸ்கீம் டிகிரியில் கண்டுள்ள வாதிகளுக்கு அந்த வழக்கை தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றால் சரியல்ல. ஆண்டு தோறும் பொதுக்குழு கூடுவது உண்டு. முதன் முதலில் பொதுக்குழுவில் நீங்கள் எப்போது கலந்து கொண்டீர்கள் என்றால் 2009. அதற்கு முன்பு பொதுக்குழுவில் நான் கலந்து கொள்ளவில்லை என்றால் 2007 ஆம் ஆண்டில் பொதுக்குழுவில் கலந்து கொண்டேன். எங்களது டிரஸ்ட் பொதுக்குழு கூட்டத்தில் வரவு செலவு கணக்கு வாசிக்கப்படும். நாள்வழி, பேரேடு போன்ற பதிவேடுகள் உண்டு. பொதுக்குழு கூட்டத்தில் அங்கத்தினருக்கு முன் அறிவிப்பு கொடுத்து பொதுக்குழு கூட்டப்படும் என்றால் சரிதான். அந்த பொதுக்குழுவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். அதில் வருகை புரிந்த அங்கத்தினர்கள் கையொப்பம் செய்வார்கள் என்றால் சரிதான். தீர்மானம் ஏற்கப்பட்டதை தலைவர் கையெழுத்து செய்வார். 2007 க்கு முன்னர் கடைசியாக எப்போது பொதுக்குழு கூட்டினார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த ஆவணங்கள் நான் பார்க்கவில்லை. நடராஜ பிள்ளை என்பவர்

டிரஸ்டியாக இருந்தபோது பொதுக்குழு கூட்டப்பட்டதா என்றால் நடராஜ பிள்ளை என்ற நபர் உறுப்பினராகவும் இல்லை, டிரஸ்டியாகவும் இல்லை, நடராஜன் என்பவர் டிரஸ்டியாக இருந்தார். 3 வது வாதி கோவிந்தசாமி இதற்கு முன்பாக உள்ள பொதுக்குழுவில் பங்கு பெற்றாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நடராஜன் என்பவர் எப்போது இறந்தார் என்றால் 1991 ல் இறந்து விட்டார். 1991 க்கு பிறகு எங்களது டிரஸ்ட்டில் பொதுக்குழு கூட்டப்பட்டதா என்றால் 2007 க்கு பிறகு கூட்டப்பட்ட பொதுக்குழு பற்றி எனக்கு தெரியும். அதற்கு முன்னர் நடந்த பொதுக்குழு பற்றி எனக்கு தெரியாது. 1991 க்கு பிறகு 2007 க்கு முன்னர் நடராஜ பிள்ளை இறந்த பின்னர் யாராவது நடராஜபிள்ளைக்கு பதில் டிரஸ்டியாக சேர்க்கப்பட்டார்களா என்றால் நடராஜன் இறப்பிற்கு பின்பு அவருக்கு பதிலாக டிரஸ்டியாக யாரும் சேர்க்கப்படவில்லை. 2007 க்கு முன்னர் டிரஸ்டின் நிர்வாகமும், கோவிலை பற்றி தெரியுமா என்றால் கோவிலை பற்றி தெரியும். 2007 க்கு முன்பு டிரஸ்ட்டின் நிர்வாகத்தை பற்றி தெரியாது. நாங்கள் முன் ஆவணங்களை பார்த்துதான் யார் யார் உறுப்பினர்கள் என்று தெரிந்து நாங்கள் அறிவிப்பு கொடுத்தோம் என்றால் டிரஸ்டிற்கு பாத்தியப்பட்ட நபர்களுக்கு அறிவிப்பு கொடுத்தோம். 2007 க்கு முன்பு டிரஸ்டிற்கு உறுப்பினர்கள் யார் இருந்தார்கள் என்று எதன் அடிப்படையில் 2007 க்கு பின்பு அறிவிப்பு கொடுத்தோம் என்றால் 1974 ஆம் ஆண்டு எனது தகப்பனார் பழனியப்பன் டிரஸ்டியாக இருந்தார். அவர் ஒரு உறுப்பினர்கள் பட்டியல் வைத்திருந்தார். அதை நான் பார்த்திருக்கிறேன். அதை வைத்து நான் உறுப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்புவோம். எனது தகப்பனார்

மேற்படி பட்டியலை என்னிடம் கொடுக்கவில்லை. என்னுடைய ஞாபக சக்தியை வைத்துதான் உறுப்பினர்கள் யார் யார் என்பதை கண்டறிந்து பொதுக்குழு கூட்ட அறிவிப்பு கொடுத்தோம் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் கூறுகிறார் தேவைப்பட்டால் எனது தகப்பனார் வைத்திருந்த மேற்படி சங்கத்தின் உறுப்பினர் பட்டியலை தாக்கல் செய்ய முடியும். ஸ்கீம் டிகிரியில் ஒரு பொதுக்குழு கூட்டி மூன்று வருடத்திற்கு ஒரு முறை இரண்டு டிரஸ்டி தேர்ந்தேடுக்கப்படுவார்கள் என்றால் சரிதான். மூன்று வருடம் முடிவடைவதற்கு முன்பாக பொதுக்குழு கூட்டி தேர்ந்தெடுப்பதற்கு அறிவிப்பு கொடுக்கப்பட வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு பொதுக்குழு கூட்டாமல் இருந்தால் நீதிமன்ற அனுமதிபெற்று பொதுக்குழு கூட்டப்பட வேண்டும் என்று ஸ்கீம் டிகிரியில் கண்டுள்ளது என்றால் சரியல்ல. டிரஸ்ட் நிர்வாகம் சம்பந்தமாக தகராறு எழுந்தால் நீதிமன்றம் அனுமதி பெற்று டிரஸ்ட் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றால் தகராறு ஏற்பட்டால் மட்டுமே நீதிமன்றம் அனுமதி பெற்று டிரஸ்டிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். 1991 க்கு பின்னர் 2007 வரையிலும் எந்த அங்கத்தினரும் பொதுக்குழு கூட்ட வேண்டும் என்று எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. 1991 லிருந்து 2007 வரை பொதுக்குழு கூட்டுவதற்கு முயற்சி செய்வதை காட்டுவதற்கு எதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. 2007 தற்காலிக குழுவிம் சிதம்பரம் ஆவணங்களை சமர்ப்பித்து அதன் அடிப்படையில் பொதுக்குழு கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டு, பொதுக்குழு கூட்டம் கூட்டப்பட்டது என்றால் சரிதான். 22.02.2009 ல் பொதுக்குழு கூட்டம் நடந்ததை காட்டும் ஆவணம் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்வோம். 2009 நான் டிரஸ்டியாக தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 22.02.2009 க்கு பிறகு பொதுக்குழு கூட்டவில்லை என்றால் சரியல்ல. நான் டிரஸ்டியாக செயல்பட அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. தீர்மானம் என்னால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

பிரதிவாதி வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது.